# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 8 AUGUST இதழ் 8




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக 1
2. பரிசுத்த ஆவியின் வரங்கள் 7
3. (பெண்கள் பகுதி) பெற்றோர்களாக இருப்பதின் பொறுப்புகள் 12
4. இயேசுவை தேவனுடைய குமாரனென்று நான் ஏன் விசுவாசிக்க வேண்டும் 15
5. ஆவியானவர் தெளிவாகப் பேசுகிறார் 19
6. தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறத்தல் 21
7. அந்தி கிறிஸ்து என்றால் யார்? 24
8. யெகோவா சாட்சிகள் - (7) 26
9. கிறிஸ்தவ ஐக்கியம் என்றால் என்ன? 29
10. கிறிஸ்துவின் சபை என்பதும் இராஜ்யம் என்பதும் ஒன்றுதான் 31

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 AUGUST Issue-8


## ஆசிரியவுரை

## "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக"

"பரிசுத்த தேவன், பரிசுத்த ஆவியானவர் மூலம், பரிசுத்த மனிதர்களைக் கொண்டு கொடுத்த, பரிசுத்த வார்த்தைகளடங்கிய பரிசுத்த வேதாகமத்தில், என்னை மிகவும் அதிகமாய்க் கவர்ந்த பகுதிகளில் ஒன்றுதான், யோவான் எழுதின நற்செய்தி நூலில் காணப்படும் பதினான்காம் அதிகாரம். இவ்வதிகாரத்தில் உள்ள முதல் வசனத்தின் முதல் பகுதி, உலகெங்குமுள்ள அநேகருக்கு அன்றாடம் ஆறுதலைக் கொடுக்கக் கூடிய அற்புதமான வார்த்தைகள். ஆம், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று இயேசுக் கிறிஸ்து திருவாய் மலர்ந்தருளின வார்த்தைகள் இங்கு தான் இடம் பெற்றுள்ளது.

தன் வாழ்நாட்காலத்தில், ஒரு முறை கூட கலக்கமடைந்திராத எந்தவொரு மனிதனும் இப்பூமியில் இருந்திருக்கவோ, இருக்கவோ முடியாது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்க்க யாராலும் கூடாது. நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற எதிர்பாராத தோல்விகளோ, திடீரென்று ஏற்படும் இழப்புகளோ, நம்பிக்கைத் துரோகங்களோ, பொய்த்துப் போகும் பெரும் நம்பிக்கைகளோ, பெருத்த ஏமாற்றங்களோ நம்மை கலக்கத்திற்குள்ளாக்கி விடும். அந்நேரங்களில், யாராவது நமக்கு ஆறுதலாக இருக்க மாட்டார்களா என்று நம் இருதயம் தவித்து ஏங்கும். அச்சந்தர்ப்பங்களில் கிடைக்கும் ஒவ்வொரு ஆறுதலான வார்த்தையும் மனதிற்கு இங்கிதமாக இருக்கும். கலங்கின இருதயத்தின் பாரத்தை வெகுவாகக் குறைக்கும்.

அப்படி ஒரு கட்டத்தில், இயேசுக் கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப் பட்ட சீஷர்கள், பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகி, செய்வதறியாது திகைத்து நின்று, அடுத்து என்ன நடக்குமோ, நம்முடைய வாழ்க்கை எப்படிப் போகுமோ என்று கலங்கியிருந்த வேளையில் தான், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று சீஷர்களைப் பார்த்துச் சொன்னார்.

இப்பொழுது, இவ்வாக்கியத்தின் பின்னணியைப் பார்ப்போம். முதலாவது, யோவான் ஆசிரியர் எழுதிய நற்செய்தி நூலில் இடம்பெற் றுள்ளது. இப்புத்தகம், மற்ற மூன்று நற்செய்தி நூல்களைக் காட்டிலும் வித்தியாசமானது. மற்ற மூவரும் இயேசுவை "மனுஷ குமாரனாகக் காட்டும் போது, இந்த யோவான் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில், "தேவ குமாரனாக" சித்தரிக்கிறார்.

கிறிஸ்துவின் ஊழியம் இந்நூலில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட் டுள்ளது. 1) தன்னைப் பின்பற்றி வந்த திரளான ஜனங்களுக்கு முன்பாகச் செய்த அற்புதங்கள் மற்றும் பிரசங்கங்கள் அடங்கிய பொது ஊழியம் (யோவா. 1 : 19 - 12 அதி). 2) தன்னால் தெரிந்து கொள்ளப் பட்ட சீஷர்களோடு, எருசலேம் பட்டணத்தின் ஒரு மேல்வீட்டில், தனிமையில் நடத்தும் உரையாடலோடு கூடிய ஊழியம். (13 - 17 அதி). முன்னது சில வருடங்களில் நடந்தவை. பின்னது சில மணி நேரத்தில் நடந்தேறியவை.

தன்னுடைய சீஷர்களோடு தான் நடத்திய இறுதி உரையாடலில், ஒரு குண்டைத் தூக்கிப்போடுகிறார். "பிள்ளைகளே, இன்னும் கொஞ்ச காலம் நான் உங்களுடனே கூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடா தென்று நான் யூதரோடே சொன்னது போல இப்பொழுது உங்க ளோடும் சொல்லுகிறேன்" (யோவா. 13 : 33) என்பதே அந்தச் செய்தி.

இதைக்கேட்ட சீஷர்கள் அதிர்ந்து போனார்கள். ஏனெனில், இவர்கள் தங்கள் குடும்பம், சொந்தம், தொழில், வருமானம் போன்ற அனைத்தையும் துறந்து, இனி இயேசுவே போதுமென்று முடிவெடுத்து வந்தவர்கள். ஆம், கலிலேயாக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது, பேதுருவையும், அந்திரேயாவையும் அழைத்தார். உடனே அவர்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின் வந்தார்கள் (மத். 5 : 20). அதே கடற்கரை ஓரத்தில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த யாக்கோபையும், யோவானையும் அழைத்தார். அவர்கள் உடனே தங்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு அவருக்குப் பின்

வந்தார்கள் (5 : 22) ஆயத்துறையில் அமர்ந்திருந்த மத்தேயுவை அழைத்த பொழுது, அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து அவருக்குப் பின் வந்தான் (லூக். 5 : 28). ஆனால், இப்பொழுதோ தாங்கள் நம்பி வந்த இயேசு, நான் உங்களை விட்டுப் போகிறேன் என்று சொல்கிறார். அத்தோடு நிறுத்தாமல் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாது என்றும் தெரிவிக்கிறார். எஞ்சியிருக்கும் காலத்தை இயேசுவோடு கழிக்கலாம் என்று எண்ணின சீடர்களின் மனநிலை எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்.

சீடர்கள் எந்த அளவிற்குக் கலங்கியிருந்தார்களென்பது அவர்கள், கேட்ட கேள்விகளிலேயே வெளிப்படுகிறது. "தோமா இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்". (14 : 5). பிலிப்பு அவரை நோக்கி : ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்" (14 : 8). இயேசு என்ன சொல்கிறார் என்பதை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாத ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி, "ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன?" என்றான். (14 : 22).

ஆக, மொத்தத்தில் சீஷர்கள் ஒவ்வொருவரும் அசாதாரண சூழலில் இருந்தனர். அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பதை யோசிக்க முடியாதபடி அதிர்ச்சியும், சோகமும் அவர்களைக் கவ்வியிருந்தது. எருசலேமில் பூமிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார், அதில் நாமெல்லாம் முக்கியப் பங்காற்றலாம் என்று நினைத்த நினைப்பெல்லாம் தகர்ந்து போனதே என்று எக்கச்சக்கமாக வருந்தியிருப்பர். இந்தக் காட்சி கனவா, நனவா என்று கண்களைக் கசக்கிக் கூடப் பார்த்திருப்பர். பின் ஏன் நம்மை இவர் தெரிந்தெடுத்தார்! எதற்காக மூன்று ஆண்டுகள் பயிற்சி கொடுத்தார்? இவரில்லாமல் நாம் எப்படி ஊழியம் செய்வது? ஊழியத்தில் வரும் இடர்பாடுகளை யார் தீர்த்து வைப்பது? என்று பலவாறாகத் தங்களுக்குள் சிந்தித்து கலங்கியிருந்த வேளையில் தான், இருதயத்தின் நினைவுகளை ஆராய்ந்து பார்க்கும் வல்லமை நிறைந்த இயேசு (2 : 25), "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று சொல்லி, பெற்ற தகப்பனைப் போல் ஆற்றித் தேற்றமுனைகிறார்.

எந்தெந்த காரியங்களுக்காக அவர்கள் கலங்கினார்களோ, அவை எல்லாவற்றிற்கும் சரியான பதில் கொடுத்து, சீடர்கள் புதிய உற்சாகத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களைத் தேற்றுகிறார்.

அவரைப் பின்பற்றுவோர் நலனில் அவர் எவ்வளவு அக்கறையும், கரிசனையும் உள்ளவராக இருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது. இவைகளை அறிந்து கொள்வது நமக்கும் பிரயோஜனமாக இருக்குமென நம்புகிறேன்.

I. முதலாவது, தாங்கள் கைவிடப்பட்டு விட்டோம் என்று சீஷர்கள் நினைத்தனர். நாம் நம்பியிருந்த இயேசு நம்மை விட்டுப் போகிறார். வீடு, வாசல், குடும்பம், சொத்து, சுகம், எல்லாவற்றையும் விட்டு இவர் பின்னால் வந்தோம்; இனி இந்தப் பூமியில் நமக்கென்று ஒன்றுமே இல்லை என எண்ணினர்.

அப்பொழுதுதான் இயேசு நான் போவதே உங்களுக்காகத்தான்; மேலும், நான் போவது நிரந்தரமும் அல்ல என்று சொல்லி இவ்வாறாகத் தேற்றுகிறார். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். (14 : 2,3) என்றார். அத்தோடு நில்லாமல், நீங்கள் நினைக்கிறது போலல்ல, "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்" (14 : 18) என்றும் கூறுகிறார்.

II. இரண்டாவதாக, அற்புதங்கள் பல செய்த இயேசு - தங்களுக்கு அற்புதங்கள் செய்யும் வல்லமையைத் தந்த இயேசு இல்லாமல் அவரின் செய்தியை மற்றவர்களுக்கு எப்படி எடுத்துச் சொல்வது என்று கலங்கின வேளையில் தான், "... நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்; இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" (14:12) என்று வாக்குக் கொடுத்தார்.

இங்கே என்னைக் காட்டிலும் பெரிய கிரியைகளைச் செய்வீர்கள் என்பதின் பொருள் என்ன? இயேசுவைக் காட்டிலும் சீஷர்கள் "வல்லமை" நிறைந்தவர்களாக இருக்கமுடியும் என்பதா? நிச்சயமாக இல்லை. பின்னே, என்ன பொருள்? ஊழியத்தின் "வல்லமையில் அல்ல". ஆனால் ஊழியத்தின் அளவிலே அவர்கள் இயேசுவைக் காட்டிலும் பெரிய காரியங்களைச் செய்தார்கள்.

இயேசுக் கிறிஸ்து தன்னுடைய 3 ஆண்டு கால ஊழியத்தில் சீஷர்களைப்போல் அதிகமானோரை மாற்றவில்லை. ஆனால் பெந்தெ

கொஸ்தே நாளில் சீஷர்கள் 350 பேரை ஒரே சமயத்தில் மனம் மாற்றினர். இயேசுக் கிறிஸ்து தான் பிறந்த இடத்திலிருந்து சுமார் 3000 கி.மீட்டருக்கும் அதிகமாகப் பிரயாணம் செய்து பிரசங்கித்ததில்லை. ஆனால், சீஷர்கள் கண்டங்கள் சில சுற்றி நற்செய்தியைப் பரப்பினர். இவ்வரிசையில் இன்னும் சிலவற்றைச் சேர்க்க முடியும்.

இயேசு சரீரத்தில் தங்களுடன் இல்லாவிட்டால் எதுவுமே முடியாது என்று கலங்கிய சீஷர்களுக்கு, "முடியும்", என்றும், என்னை விடப் பெரிய காரியங்களைச் செய்வீர்களென்றும் சொல்லி ஆறுதல்படுத்தினார்.

III. இயேசுவுடனிருந்து, சீஷர்கள் ஊழியம் செய்த நாட்களில், எதிர் வந்த எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும், அவர்களை விடுவித்து, சோர்ந்து போகாமல் தேற்றிக்கொண்டு வந்தார். குறைகளோ, பிரச்னைகளோ அவர்களுக்கு இருக்கவில்லை. இயேசுவுக்குப் பிறகு நம்முடைய பாடுகளுக்குப் பரிகாரம் தேடி எங்கே போகப் போகிறோம், நமக்கு யார் இருக்கப்போகிறார்கள் என்று நினைத்த பொழுது தான் இயேசு இவ்வாறு கூறினார். "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (14 : 16, 17) என்றார்.

IV. அடுத்து, இயேசுக் கிறிஸ்து கடந்த 3 வருடங்களில் அநேகங் காரியங்களைக் குறித்து தங்களோடு பேசினார். அவர் பேசின ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமானது. ஆனால், எல்லாம் ஞாபகத்தில் இல்லையே, நிறைய காரியங்கள் மறந்து போய்விட்டதே, அவருடைய உபதேசத்தைப் பற்றிய நம்முடைய போதனைகள் முழுமையாக இருக்காதே, இவ்வளவு சீக்கிரம் நம்மை விட்டுப் போய்விடுவார் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைக்கவில்லையே, என்றெல்லாம் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும் போது தான், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (14 : 26) என்றார்.

இந்தக் காரியத்திலும் உங்களுக்குக் கலக்கம் வேண்டியதில்லை. வருகிறவர் சாதாரணமானவர் அல்ல. நான் பேசின வார்த்தைகளில்

ஒன்றைக் கூட அவர் மீதியாக வைப்பதில்லை. நான் போதித்த எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். நீங்கள் தைரியமாக ஊழியம் செய்யலாம், ஆகவே கவலை வேண்டாம் என்கிறார்.

V. எல்லாம் சரி, நம்முடைய குருவான இயேசு ஊழியம் செய்த நாட்களிலேயே அவருக்கு கடுமையான எதிர்ப்பு இருந்தது. எப்படியெல்லாம் இந்த ஜனங்களால் நிராகரிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். பச்சை மரத்துக்கே அந்தப் பாடு எனில், பட்டமரமாகிய நம்மை அவர்கள் என்னவெல்லாம் செய்வார்களோ. இந்த வணங்காக் கழுத்துள்ள ஜனங்களுக்கு முன்பாக நாம் எப்படியெல்லாம் விரட்டப்படப் போகிறோமோ என்று தங்களுக்குள்ளாக சிந்தித்து, எங்கே நம்மை பயமுறுத்திப் பணிய வைத்துவிடுவார்களோ என்று கலங்கிக் கொண்டிருந்த போது, இயேசு இவ்வாறு சொன்னார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக". (வ.27) என்று சொல்லி ஆறுதல் அளித்தார்.

இதை வாசிக்கும் சகோதரனே! நண்பரே! இந்த இயேசுவைக் குறித்து நீ என்ன நினைக்கிறாய்? இந்த இயேசுவின் மீது நம்பிக்கை வைக்கவும், அவருக்கு உம்முடைய வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கவும் இன்னுமா தயங்க வேண்டும்? அவர்மீது நம்பிக்கை வைக்கத் தடையாக இருப்பது எது?

அன்று சீஷர்களின் மன பாரத்தை அறிந்து, தன்னைப் பின்பற்றி வந்தவர்கள் எவ்விதத்திலும் கலங்கக்கூடாது என்று தேற்றின இயேசு, நம்மைக் கலங்கும்படி விட்டுவிடுவாரா? நிச்சயமாக விடார். நம்பிக்கையோடு அவரிடம் வா. உன் வாழ்க்கையை தாராளமாக அவருக்கு ஒப்புக்கொடு. அவர் வாக்குக் கொடுத்ததைப் போல், ஸ்தலத்தை ஆயத்தம் செய்து முடித்துத் திரும்ப வரும்போது, அந்த ஸ்தலத்தில் பங்கு வேண்டுமெனில், பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளுக்கு உன்னுடைய வாழ்க்கையை ஒப்புக் கொடுக்க.

ஏனெனில், அவர் சொல்லிய பரிசுத்த வார்த்தைகளாகிய வசனங்கள் தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோவா. 12 : 48). ஆகவே, நாம் யாவரும் நம்மைக் கலங்காமல் காத்துக் கொள்ளும் இயேசுவின் உபதேசங்களுக்கும், அந்த உபதேசங்களை உள்ளடக்கியிருக்கும் வசனங்களுக்கும் நம்மை ஒப்புக் கொடுப்போம். பரமஸ்தலத்திலே பங்கைப் பெற்றுக் கொண்டு, "ஒருபோதும் கலங்க வேண்டிய அவசியமேயில்லாத" பேரின்ப வாழ்வு வாழ்வோம்!

EZS. ராஜநாயகம்.

# பரிசுத்த ஆவியின் வரங்கள்

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பற்றியும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி பற்றியும் நாம் ஏற்கனவே பார்த்தோம். இப்போது, அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்களைப் பற்றி நாம் பார்க்கலாம்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்ட பின், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்கள் அப்போஸ்தலர்களால் நடத்தி வைக்கப்பட்ட கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த மற்ற அனைவரும், நமது நாட்கள் வரையிலும், கர்த்தர் மீண்டும் வரும் நாள் வரையிலும் கூட, பரிசுத்த ஆவியின் வரங்களை அல்லது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியன் வரங்களை பெற்றிருக்கின்றனர், அல்லது பெற்றுக் கொள்ளவிருக்கின்றனர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்திற்கு நாம் திருப்பிக் கொள்ளும் போது, யூதர்களின் விழாவாகிய பெந்தெகொஸ்தே நாளிலே, உலகின் நாலா திசைகளிலிருந்தும் யூதர்கள் கூடி வந்திருந்த வேளையில், அப்போஸ்தலர்கள் எவ்வாறு எருசலேமிலே தங்கியிருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வேளையில் தான், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற அவர்கள் அந்நிய பாஷைகளில், - உண்மையிலேயே, அங்கு அன்று கூடியிருந்த மக்களின் பாஷைகளிலே, - பேசத் தொடங்கினார்கள். இதைத் தொடர்ந்து, கூடியிருந்த திரளான மக்கள் கூட்டத்திற்கு உயிர்த்தெழுந்த கர்த்தராகிய கிறிஸ்துவைப் பற்றி பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் போதித்தார்கள். தொடர்ந்து, வசனம் கூறுகிறது : "இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப். 2 : 37, 38).

கர்த்தரின் மேல் விசுவாசம் வைத்தவர்கள், தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, பாவங்கள் அகன்றிட திருமுழுக்குப் பெற்றனர் என்றும், பின் பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றார்கள் என்றும் இந்த வசனங்களில் நாம் காண்கிறோம். இது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்கள்.

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கிலிருந்தும், அப்போஸ்தலர்கள் கொடுத்த, கைகளை வைத்து தரும் அளவிலான பரிசுத்த ஆவியிலிருந்தும், பரிசுத்த ஆவியின் வரங்கள் மாறுபட்டது என்பதை அறிய வேண்டும். இவற்றைப்பற்றி சுவிசேஷத்தில் படிக்கும்போது, அந்தந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைப் பொறுத்து, ஒவ்வொன்றும் மற்றதிலிருந்து மாறுபட்டது என்பதைப் பார்க்கலாம். உதாரணமாக, அப். 2 : 1-4ம் வசனங்களில், அப்போஸ்தலர்கள் பரிசுத்தத ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர் என்பதை தெளிவாக நாம் காணலாம். அப்போஸ்தலருடைய நடபடி 6, 8 அதிகாரங்களில், பரிசுத்த ஆவியின் வல்லமையை சில சீடர்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்தனர் என காண்கிறோம். அப். 2 : 38ம் வசனத்தில், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் அனைவருக்கும் பரிசுத்த ஆவியின் வரங்கள் வாக்களிக்கப் பட்டிருந்தன.

மீண்டும், சீடர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர்களும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை என்பதை அப். 6ம் அதிகாரத்தில் நாம் பார்க்க முடிகிறது. இல்லாவிடில், அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள் பெற்றுக் கொள்ள தேவை இருந்திருக்காது என்ற போதிலும், அவர்கள் நற்சாட்சி பெற்ற நல்லவர்கள் என்றும், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால், அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்கள் என்று சொல்லப்பட்டதின் அர்த்தம் என்ன? ஒன்று நிச்சயம்: அற்புதங்கள் செய்யும் வல்லமை, அந்நிய பாஷைகளில் பேசுவது, இன்னும் இது போன்றவைகளை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்று அர்த்தம் அல்ல. மாறாக, அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றிருந்தனர் என்று தான் அதற்கு அர்த்தம். அதை எப்போது அவர்கள் பெற்றனர்? அப். 2 : 38ம் வசனத்தின்படி, தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து, அவர்களின் பாவங்கள் மன்னிக்கப் பட்டிருந்த போது, ஒவ்வொருவனும் தனது பாவங்களிலிருந்து இரட்சிக்

கப்பட, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது அடையும் அதே அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியைத்தான் அவர்கள் பெற்றனர். வேறு விதமாகச் சொன்னால், கர்த்தருக்கு ஒருவன் இன்று கீழ்ப்படியும் போது பெற்றுக் கொள்ளும் அதே அளவிலான ஆவிதான் அது.

போதிக்கக் கூடாது என்று கட்டளையிட்ட பின்பும், ஏன் தொடர்ந்து போதித்தார்கள் என விளக்கம் கேட்பதற்காக, எருசலேமில் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக பேதுருவும் பிற அப்போஸ்தலர் களும் கொண்டு வரப்பட்ட போது, பிரதான ஆசாரியனுக்கும் அவனோடுள்ள பிறருக்கும் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். "... மனிதர்களுக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படி கிறதே அவசியமாயிருக்கிறது. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ர வேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிற தற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்க ளுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்." (அப். 5 : 29 - 32). பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும், கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவியும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என கூறும் அதே வேளையில், நிச்சயமாக, பரிசுத்த ஆவியின் வரங்களும், அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குக் கொடுக்கப் பட்டது, தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. கீழ்ப்படிவோருக்கு பரிசுத்த ஆவியானவர் தாமே கொடுக்கப்படுகிறார் என்பதை நீங்கள் கவனிக்கமுடியும். அவ்வாறு, கீழ்ப்படிகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியா னவர் தாமே கொடுக்கப்பட்டால், கிறிஸ்தவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் தாமே வாசம் செய்ய வேண்டும்.

தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதினார் : "அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகா ரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்தி சொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்த

மாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்பட டாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்த மாயும் கனமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து : இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்ச ரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத் தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனிதரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான். சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே." (1 தெசலோ. 4 : 1- 9). இந்த சூழ்நிலையில், இந்தக் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாகவும், ஒழுங்காகவும் இருக்க வேண்டுமென்றும், ஒருவருக்கொருவர் சரியான மரியாதையு டனும் அன்புடனும் இருக்கவேண்டுமென்றும், ஏனென்றால், அவர்க ளுக்குப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டுள்ளார், அவர்கள் தேவனைச் சார்ந்தவர்கள் என்றும் அவர்களை உற்சாகப்படுத்த பவுல் முயற்சிக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில், பவுல் கிறிஸ்தவர்களிடம் பொதுவாகப் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி பேசுவதின் மூலம் அவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர் எனக் காட்டுகிறார். அது பரிசுத்த ஆவியின் வரங்கள் அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான ஆவி. இதை நான் மீண்டும் மீண்டுமாகக் குறிப்பிட்டுக் கொண்டேயிருப்பதின் காரணம் என்னவென்றால், அப்போஸ்தலர்களைப் போல அற்புதங்கள் செய்யும் வல்லமையுடன் ஆவியைப் பெறுவதற்கும், அவர்கள் கைகளை வைத்துக் கொடுத்ததற்கும், அற்புதங்கள் செய்ய இயலாத அளவில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் ஒரு தெளிவான வித்தியாசம் இருப்பதைக் காட்டவே.

கொரிந்து கிறிஸ்தவர்களிடம் பவுல் கூறினார் : "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்". (1 கொரி. 3 : 16, 17). மீண்டுமாக, அவர் கூறும்போது, "உங்கள் சரீர மானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற

பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்", (1 கொரி. 6 : 19 , 20), என்றார். இப்போது, நிச்சயமாக, கொரிந்து பட்டணத்தார் கைகளை வைத்து பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை; எனவே அவர்கள் அற்புதங்களைச் செய்ய முடியவில்லை. வேறு என்ன முடிவுக்கு நாம் வர இயலும்? பின்னர், அவர் யாரிடம் பேசிக் கொண்டிருந்தார்? அங்குள்ள கிறிஸ்தவர்களிடையே பொதுவாக பேசிக் கொண்டிருந்தார் என்றாலும் பரிசுத்த ஆவி அவர்களிடம் வாசம் செய்வதாக அவர் கூறினார். எந்த அர்த்தத்தில் அவ்வாறு சொன்னார்? அற்புதங்கள் செய்ய இயலாத பரிசுத்த ஆவியின் வரம் என்ற அர்த்தத்தில் தானே கூறினார்.

ஒரு கிறிஸ்தவனிடம் பரிசுத்த ஆவி அற்புதங்கள் செய்ய முடியாத அளவில் எவ்வாறு வாசம் செய்ய முடியும்? எவ்வாறு கிறிஸ்து நம்மில் வாசம் செய்கிறாரோ அப்படி (கொலோ. 1 : 27); தேவன் வாசம் செய்வதைப் போலவும் (எபே. 4 : 6); நிச்சயமாக, நாம் கிறிஸ்துவிலும் தேவனிலும் வாசம் செய்வது போலவும் தான். (ரோமர் 6 : 3, 4 : கலா. 3 : 26, 27).

இந்தப் பாடத்தில் நான் வலியுறுத்திக் குறிப்பிடுவது என்னவென்றால், எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகின்றனர், ஆனால் அது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவி. வேறுவிதமாகச் சொன்னால், பரிசுத்த ஆவியின் வரமானது. கிறிஸ்தவனில் வாசம் செய்யும் ஆவி அற்புதங்களைச் செய்யும் எந்த வல்லமையையும் அவனுக்குத் தருவதில்லை, அல்லது புதிய ஏற்பாட்டில் கண்டபடி, ஆவியின் வார்த்தைக்கு விரோதமாக எதையும் செய்வதில்லை.

J.C.சோட்.

இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை பொல்லாதவர்களுக்குக் கை கொடுக்கிறதுமில்லை.

**யோவு. 8 :20**

## பெண்கள் பகுதி

அளிக்க, வயதான பெற்றோர் களின் தேவைகளைக் கவனிக்க ஒரு குழந்தை இல்லாமற்போனால்

# பெற்றோர்களாக இருப்பதின் பொறுப்புகள்

"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப் படுத்தி ... ஆண்டு கொள்ளுங்கள்" என தேவன் ஆதியிலே ஆதாம், ஏவாளிடம் கூறினார். (ஆதி. 1:28).

"இதோ, பிள்ளைகள் கர்த் தரால் வரும் சுதந்தரம், கர்ப் பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வால வயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புக ளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத் தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான் . . ." என சங்கீதம் 127 : 4 - 6 வசனங்களில் நமக்குச் சொல்லப்படுகிறது.

நீதிமொழிகள் 30 : 15, 16 வசனங்களில் காணும், "ஒரு போதும் திருப்தியடையாத" காரியங்களின் பட்டியலில் " மலட்டுக் கர்ப்பம்" தனது இயலா மைக்காக அலறுகிறது.

பிள்ளைப் பேற்றின் அவசியம் மாறிவிடவில்லை. குழந்தைகளுக்காக ஏங்குவதையும், ஒரு குழந்தை பிறந்ததும் ஏற்படும் மகிழ்ச்சியையும், அதோடு, இளம் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் கவலைகளையும் தேவன் ஆண், பெண் இருபாலரிடமும் வைத்துள்ளார்.

குழந்தைகளுக்காக ஏற்படும் இந்த இயற்கையான ஏக்கத்துடன், நாகரீகத்தின் தாக்குதலையும் அடிக்கடி சந்திக்க வேண்டி யுள்ளது. பல இடங்களில், குழந்தை பேரில்லாதப் பெண்ணை மிகவும் அவமானப்படுத்து வதோடு, மலடி என்ற பட்டத்தைக் கொடுத்து சமுதாயத்தில் ஒதுக்கி வைப்பதும் கூட நடந்து வருகிறது. அவளுடைய நாத்தனார், மாமி யார் போன்றவர்கள் உடலாலும், உள்ளத்தாலும் அவளுக்குத் தீங்கு செய்கிறார்கள். சில சமுதாயங் களில் அவள் விவாகரத்துக்கு அஞ்சியே எப்போதும் வாழ வேண்டியதிருக்கும். குழந்தைப் பேறு அவளுக்கு இல்லாவிட் டாலும் சரி, அவள் கணவனுக்கு அதற்குரிய சக்தி இல்லாது போனாலும் சரி, மலடி என்ற பட்டத்தை சுமக்க வேண்டியது பெண் தான்.

இப்பழங்கால தப்பெண்ணங் களின் விளைவுகள் பயங்கரமா னதாக இருக்கின்றன. குணப்

படுத்த முடியாத இயற்கையின் ஒரு பிரட்சனைக்காக, ஒரு நபரைத் தண்டிப்பது அவருக்கு இழைக்கும் பெரும் தீங்காகும். குழந்தையற்ற தம்பதிகள் ஒரு அனாதையை அல்லது கவனிப் பில்லாத ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொண்டு, அவர்களுடைய இதயங்களை புதிய நம்பிக்கை யால் நிரப்பிட இந்த சமுதாயம் ஊக்கமளித்தால் எவ்வளவு சிறப் பாக இருக்கும்.

என்ற போதிலும், உலகில் இன்று தீவிரமாகப் பெருகிக் கொண்டு வரும் ஜனப் பெருக் கத்தைப் பார்க்கும் போது, அதிகமான அளவில் காணப் படும் பிரட்சனை குழந்தைப் பேறில்லாதிருப்பது அல்ல, ஆனால் அதிகக் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களே இன் றைய பிரட்சனை ஆகும். இந்த நவீன காலத்திலும் கூட, ஒரு குடும்பத்தில் 6, 10 அல்லது 12 குழந்தைகள் கூட பிறந்திருப்பது அரிதான காட்சி ஒன்றுமல்ல.

தங்களுடைய சரீர இச்சை களின் விளைவாகக் குழந் தைகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் பெற்றோர்க ளுக்கும், குழந்தைகளின் தேவை களைக் கவனித்து பராமரிப்பதற் காகப் பெற்றுக் கொள்ளும் பெற்றோர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. கவலைப்பட வேண்டிய காரியம் என்னவென்றால், இலட்சக்க ணக்கான குழந்தைகள் வெறும் ஆண், பெண் சேர்க்கையினால் பிறக்கின்றனவே தவிர, தேவை என திட்டமிடப்பட்டு பிறக்க வில்லை; அல்லது பெற்றோர்கள் தங்களை ஆவிக்குரிய விதத் திலோ, உணர்ச்சி பூர்வமாகவோ, நன் நடத்தையிலோ, பொருளாதா ரத்திலோ, அல்லது மற்ற எவ்விதத் திலுமோ தயாரித்து, இவ்வுல கத்திற்கு தாங்கள் கொண்டு வரவி ருக்கும் அக்குழந்தையின் தேவை கள் அனைத்தையும் தர இயலும் என்ற உறுதியில் அவை பிறப்ப தில்லை.

"ஒருவன் தன் சொந்த ஜனங்க ளையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசி யிலும் கெட்டவனுமாயிருப் பான்", என 1 தீமோத்தேயு 5 : 8ம் வசனத்தில், அப்போஸ்தலர் பவுல் வழியாக தேவன் சொல்லு கிறார். எனவே, இவ்வுலகத்திற்கு அவர்கள் கொண்டு வர இருக்கும் குழந்தைகள் பேரிலுள்ள தங்கள் பொறுப்புகளை ஒரு ஆணும் பெண்ணும் உணருவது மிகவும் அவசியமாகும். தங்களால் கவனித்துக் கொள்ள இயலும் என்ற அளவிற்கே குழந்தை களைப் பெற்று குடும்பத்தை அளவானதாக வைத்துக் கொள்ள வேண்டும். இது ஒரு அறிவுடை மையான காரியமோ அல்லது ஒரு அபிப்பிராயமோ அல்ல. இது

தேவனின் ஒரு கட்டளை! தேவன் இருப்பதை நம்பாத ஒரு மனிதனை விட, தன்னுடைய குடும்பத்தின் தேவைகளுக்குக் கொடுக்காத ஒரு மனிதன் பெருங் குற்றத்தைப் புரிந்தவன் என தேவன் அறிவித்திருக்கிறார்.

ஏன்? ஏனென்றால் தேவனை விசுவாசியாதவன் அவனுடைய ஆத்துமாவை மட்டுமே தண்டிக் கிறான். ஆனால், குழந்தைக ளுக்குத் தகப்பனாக இருப்பவன் அவர்களுக்கு உணவளித்து, உடைகள் தந்து, கல்வியளித்து, ஆவிக்குரிய வழியில் அவர்களை பழக்காவிட்டால், அவன் இவ்வுல கத்திற்குக் கொண்டு வந்த அந்த அப்பாவியான, உதவியற்ற புது ஆத்துமாக்களுக்கு துன்பங்க ளையும், ஒருவேளை ஆத்ம மரணத்தையும் கொண்டு வரும் குற்றத்தைப் புரிந்தவனாகிறான்.

நிச்சயமாக, திட்டமின்றி குழந் தைகளைப் பெறுவதில் அறிந்து அவளும் பங்கு பெறுவதால் அவனது மனைவிக்கும் இத்தண் டனை உண்டு. தேவைகளை அடைய முடியாதபடி வாழ்ந்து மடிந்து போகும் நிறைய குழந்தை களைப் பெறுவதை விட, ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளைப் பெற்று அவைகளை நன்கு வளர்ப்பது எவ்வளவு மேன்மை யானது?

விரைவில் ஒரு குடும்பத்தை உண்டாக்க இருக்கும் வாலிப தம்பதிகளே - கவனியுங்கள்!

Betty Burton Choate

Rachel Raja Nayagam

பிதாக்களே (பெற்றோர்களே) நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனை யிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

எபே. 6 : 4

# இயேசுவை தேவனுடைய குமாரனென்று நான் ஏன் விசுவாசிக்க வேண்டும்?

அவர் வாழ்ந்த வாழ்வைக் கொண்டு, இயேசு தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன். உல்லாசத்தில் ஊஞ்சலாடுவதோ, களியாட்டங்களில் காலங் கடத்துவதோ அவருடை வாழ்வின் நோக்கமாக இருக்கவில்லை. அவர் தேவனுக்கும், மனுக்குலத்திற்குமாக சுயநலமற்று வாழ்ந்தார். பாவிகளைத் தேடி, அவர்களை இரட்சிக்கவே அவர் இவ்வுலகத்திற்கு வந்தார். (லூக்கா 19 : 10; மத் 9 : 13). அவரை இவ்வுலகின் இராஜாவாக்க விரும்பிய மக்களுக்கு அவர் உடன்படவில்லை. (யோவான் 6 : 15). அவருடைய குறிக்கோள் பிறருக்கு ஊழியஞ் செய்வதேயன்றி, தாம் பிறரிடமிருந்து ஊழியத்தைப் பெறுவது அல்ல. "அப்படியே மனிதகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." என அவர் கூறினார். (மத். 20 : 28).

பசித்தோருக்கு உணவளித்து, இயேசு கருணை காட்டினார். (மத். 14 :15-20), நோயுற்றோரைக் குணப்படுத்தினார் (மத். 20 : 34); மரித்தோரை உயிரோடு எழுப்பினார் (லூக்கா 7 : 11 - 17); மரித்தலாசருவை எழுப்பும் முன்பு, "இயேசு அழுதார்" (யோவான் 11 : 35). எல்லா நாட்டு மக்களுக்காகவும் (மத். 28 : 19; லூ. 9 : 51-56; 10 : 25 - 37) ஏழைகளுக்கும் அவர் இரங்கினார். (மத். 11 : 5; 25 : 34 - 46). பாவிகளிடம் அக்கறை காட்டி, அவர்களோடு புசித்தார், பாவத்திலிருந்து விடுதலை பெறுவது எப்படி என அவர்களுக்கு உபதேசித்தார். (மத். 9 : 10 -13).

இயேசு பாவமற்ற பூரணமான ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். அவரை பாவத்தில் விழ வைக்க சாத்தான் முயன்றான், ஆனால் இயேசு ஒருபோதும் இணங்கவில்லை. (மத். 4 : 1 -11). அவர், " . . . எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபி. 4 : 15).

இயேசு பழிவாங்காமல் பரியாசங்களை சகித்துக் கொண்டார். உரோமை கவர்னர் பிலாத்துவிடம் அவர், " . . . என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரி

யதல்ல என்றார்". (யோவான் 18 : 36). மக்கள் அவரை கன்னத்தில் அறைந்தனர், கேலி செய்தனர், முகத்தில் காறித்துப்பினர், சாட்டையால் அடித்தனர், முட்களாலான ஒரு 'கிரீடத்தை' அவர் தலையில் சூட்டினர், தடியால் தலையில் அடித்தனர், கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் கடாவினர், இறுதியாக, ஒரு சிலுவையில் வேதனையுடன் தொங்க விட்டு மரிக்கச் செய்தனர். என்ற போதிலும்,"அவர் பாவஞ் செய்ய வில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தா மலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." (1 பேதுரு. 2 : 22 - 23).

அவர் மரித்த மரணத்தின் காரணமாக, இயேசு தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன். பிறர் வாழ தங்களுடைய இன்னுயிரை அர்ப்பணித்த பலரின் வீரச் செயல்களைப் பற்றி நாம் அறிவோம். ஆனால், இயேசுவின் மரணமோ இவற்றையெல்லாம் மிஞ்சியதாக இருந்தது. இவ்வுலகில் சில வருட ஜீவியத்தைக் காக்க அல்லாமல், நித்தியத்திற்கும் வாழ்வழிக்கவே அவர் மரித்தார்! மேலுமாக, ஒரு மனிதன் மற்றொருவனுக்காக மரித்தது போல அல்ல அவருடைய மரணம். அவன் மனிதனும் தேவனுமாக இருந்தார். பரலோகத்தின் மகிமையை விட்டு, தேவனின் குமாரன் பூமியில் வேதனைப்பட்டு மரிக்க வந்தார். நீங்களும் நானும் அவரோடு பரலோ கத்தில் நித்தியத்திற்கும் வாழ வேண்டி அவர் மரித்தார். (யோவான் 3 : 16; 2 கொரி. 8:9; பிலி. 2 : 5 - 11). அவர் வழியாக எந்த மனிதர்கள் தேவனால் உண்டாக்கப்பட்டார்களோ. அதே மனிதர்களின் கரங் களில் அவர் மனம் விரும்பி மரணத்தை ஏற்றுக் கொண்டார். (கொலோ. 1 : 14 - 17). கொடியவர்களால் அவர் சிலுவையில் அறையப் படுவதை முன்னறிந்திருந்தார். என்றாலும், நமது பாவங்களுக்காக தமது உயிரை அவராகவே அளித்தார். "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன் . . . " (யோவான் 10 : 17 - 18).

பாவமற்ற தேவனிடத்திலும், அவருடைய குமாரனிடத்திலும் உள்ள ஐக்கியத்திலிருந்து, நமது பாவங்கள் நம்மைப் பிரிக்கின்றன. நாம் எல்லாரும் பாவஞ் செய்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 3 : 23; 6 : 23). நாம் தேவனோடும் அவருடைய குமாரனோடும் ஐக்கி யமாக எப்போதும் வாழ்ந்திட, நமது பாவங்களின் பரிகாரமாக இயேசு

மரித்தார். (மத். 20 : 28; 1 யோவான் 1 : 3). " . . .கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள் ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார் . . ." (1 பேதுரு 3 : 18). "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6 : 3). ஒரு பாவி திருமுழுக்கு பெறும்போது, கிறிஸ்துவின் மரணத்தின் பலனான இரட்சிப்பிற்குள் நுழைகிறான் என அர்த்தம். எல்லா நாடுகளின், எல்லா மக்களும் நற்செய்தியைக் கேட்கவேண்டுமென்றும், விசுவாசிக்க வேண்டு மென்றும், அவர்களின் பாவங்களிலிருந்து மனந் திரும்ப வேண்டு மென்றும், விசுவாச அறிக்கை செய்ய வேண்டுமென்றும், பாவங்கள் மன்னிப்படையும் பொருட்டு, அவருடைய நாமத்தினாலே தண்ணீரில் (முழுகி) திருமுழுக்குப் பெற வேண்டுமென்றும் இயேசு அழைக்கிறார். (ரோமர் 6 : 3-4; 23; 8 :1; கலா. 3: 26-27; மாற்கு 16 : 15, 16; அப். 2 : 38; 8 : 36 -39; 22 : 16). அவருக்கு விசுவாசமாக ஊழியம் செய்யும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவரோடு நித்தியத்திற்கும் வாழ்வான். (வெளி. 2 : 10).

மரணத்திலிருந்து அவர் உயிர்த்ததால், தேவனின் குமாரன் என நான் இயேசுவை விசுவாசிக்கிறேன். தேவனின் வல்லமையால் இயேசு மூன்றாம் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். (1 கொரி. 15 : 1- 4). நாற்பது நாட்களாக அவருடைய சீடர்களுக்கு அவர் பலமுறைகள் காட்சி அளித்தார். (அப். 1 : 3). அவருடைய கைகளிலும் கால்களிலும் உள்ள ஆணித்தடங்களை அவர்களுக்குக் காட்டினார். அவர்களோடு உணவருந்தினார். அவர்கள் வெறும் ஆவியைப் பார்க்க வில்லை என்பதை அவருடைய சீடர்கள் ஒப்புக் கொள்ள இது உதவியாக இருந்தது. மரணத்தின் போதிருந்த அவருடைய உண்மையான சரீரத்தில் அவரை அவர்கள் பார்த்தனர். (லூக்கா 24 : 36 - 43). ஒரே நேரத்தில் 5000க்கும் அதிகமான மக்கள் அவரைக் கண்டனர். (1 கொரி : 15 : 6). இயேசு, " . . . பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெ ழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்". (ரோமர் 1 : 4). பலருக்கு அவர் காட்சியளித்த பின்பு, தேவனுடைய வலது பாரீசத்தில் வீற்றிருக்க, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டார். (அப். 1 : 6 -11; 1 பேதுரு 3 : 22). அங்கிருந்து கொண்டு, சபையாகிய அவருடைய ராஜ்யத்தை ஆளுகிறார். (எபே. 1 : 20 -23; கொலோ. 1 : 13, 18).

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் தொடங்கி, உயிர்த்த கிறிஸ்துவை தாங்கள் கண்டதாக அப்போஸ்தலர்கள் தைரியமாக அறிவித்தனர். தேவனும் அப்போஸ்தலர்கள் வழியாக அற்புதங்களைச் செய்து, அவர்களுடைய செய்திகளை உறுதிப்படுத் தினார். (எபி. 2 : 3-4). இயேசு உயிர்த்தெழுந்திருக்கிறார், இப்போது கர்த்தராக அவர் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார் என அவருடைய சீடர்கள் போதித்தது மூலமாக, இயேசுவை வெறுத்த மக்களின் கைகளில் மரணத்தைச் சந்திக்க வேண்டிய ஆபத்து அவர்களுக்கு இருந்தது. உண்மையில், பல சீடர்கள் அவ்வாறு சாட்சியளித்ததால் கொல்லப்பட்டனர். இத்தகைய கொடூரமான தண்டனைகளையும் தாண்டி, இயேசு மரித்த பின் உயிர்த்தெழுந்ததை தாங்கள் கண்டதாக அவர்கள் தொடர்ந்து அறிவித்தனர். (அப். 4 : 18 -22; 5: 17-42).

இந்த சான்றுகள் யாவும் நசரேயனாகிய இயேசுவை தேவனின் குமாரன் என தெளிவாகக் காட்டுகின்றன. இவ்வுலகில் வசித்த, வசிக்கும் சகல மக்களையும் உயிர்ப்பிக்க அவர் மீண்டும் ஒரு நாள் வருவார். பின்னர், அவர்களுடைய செயல்களுக்குத் தக்கவாறு அவர்களை அவர் நியாயந்தீர்ப்பார். (1 தெச.4 : 13 - 18; வெளி. 20 : 11 - 15), " . . . . பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருந்தவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படு வார்கள்" என அவர் நமக்குக் கூறுகிறார். (யோவான் 5 : 28 -29).

இரட்சிக்கப்பட்டவர்களை பரலோகத்திற்கு தேவனுடைய குமாரன் அழைத்துச் செல்லும் போது, நீங்களும் அவர்களில் ஒருவராக இருப் பீர்களா?

**Royce Fretwick** — ராய்ஸ் ப்ரட்ரிக்.

....கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனிதன் பாக்கியவான்.

சங். 1 : 2

# ஆவியானவர் தெளிவாகப் பேசுகிறார்

"கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" என்பது தாவீதுடைய "கடைசி வார்த்தைகள்" - (II சாமுவேல் 23 : 1 - 2).

புதிய ஏற்பாடு அதை ஒத்துக் கொள்ளுகிறது. சங்கீதம் 41ம் அதிகாரம் 9ம் வசனத்தை மேற்கோள் காட்டி பேதுரு கூறும் போது, "... பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது" என்றார். (அப். 1 : 16). "தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே" (மாற்கு 12 : 36) என்ற முன்னுரையுடன் சங்கீதம் 110 : 1ம் வசனத்தை இயேசு மேற்கோள் காட்டினார். "தாவீது தானே பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு சொல்லுகிறார்" என்று சொன்னாலும், அல்லது "ஆவியானவர் தாவீதின் வாய் வழியாக சொல்லுகிறார்" என்று கூறினாலும், இரண்டு உண்மைகள் தெளிவாகின்றன: வார்த்தைகள் தாவீதின் வாய் வழியாக வருகின்றன: செய்தி தேவனுடைய ஆவியால் வருகிறது. "தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனிதனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்". (2 பேதுரு 1 : 21).

ஆசியாவின் ஏழு சபைகளுக்கும் ஏழு கடிதங்களை இயேசு எழுதச் சொன்னார். பத்மு என்னும் தீவிலே, அப்போஸ்தலர் யோவான் பகுதி காட்சியாக கர்த்தர் கூறிய இந்தக் கடிதங்களை எழுதினார். வெளிப்படுத்தின விசேஷத்தின் ஒரு பகுதியாக இந்தக் கடிதங்கள் இருக்கின்றன. "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்ற கம்பீரமான உத்தரவோடு ஒவ்வொரு கடிதமும் முடிகிறது. (வெளி. 2 : 7, 11, 17, 29; 3 : 6, 13, 22).

ஒவ்வொரு கடிதத்திலும் நமது மகிமை பொருந்திய கர்த்தரே பேசுகிறவராகக் காட்டப்பட்டுள்ளார். அவருடைய உத்தரவுக்கிணங்க யோவான் அந்நிருபங்களை எழுதுகிறார் என்ற போதிலும், இறுதி வார்த்தையாக "ஆவியானவர் சொல்லுகிறதாவது" என முடிகிறது. ஆவியானவரின் பணிபற்றி மற்றோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு இது ஈடாக இருக்கிறது. வெளிப்படுத்துவதின் மூலகர்த்தா ஆவியானவரல்ல, ஆனால் அவர் எடுத்துக் கூறுபவரும் உத்திர

வாதம் அளிப்பவருமாவார். "....அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." (யோ. 16 : 13).

நமது மீட்பின் முழுமை பற்றியும் இறுதித் தன்மை பற்றியும் எபிரேய எழுத்தர் குறிப்பிடும் போது, "இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார் .." (எபி. 10 : 15) என்கிறார். பின்னர், அவருடைய "சாட்சி"யை மேற்கோள் காட்டுகிறார். குறிப்பிட்டுச் சொன்னால், எரேமியா 31 : 33, 34 வசனங்கள். சுவிசேஷத்தின் வாசகத்தில் ஆவியின் சாட்சி நமக்குக் காணப்படுகிறது.

நாம் இன்னுமாக, "ஆவியானவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்க" வேண்டும். நாம் "ஆவியை அணைத்து" விடலாகாது. (1 தெச. 5 : 19). பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலை நாம் பின்பற்ற வேண்டும். (ரோமர் 8 : 14). என்ற போதிலும், மிகவும் கவலையும் ஆபத்தும் உண்டாக்கக்கூடிய ஒரு தவறு என்னவென்றால், இம்மாதிரியான எச்சரிக்கைகள், சில தூண்டுதல், உள்ளுணர்வுகள், எண்ண ஓட்டங்கள் போன்ற உணர்ச்சி வசமான காரியங்களை நமக்குக் கற்றுத் தருவதாக தவறாக எண்ணிக் கொண்டிருப்பது. வார்த்தைகள், வாக்குத்தத்தங்கள், அப்போஸ்தலர்கள் மற்றும் ஆவியினால் ஏவப்பட்ட பிற மக்களுடைய எச்சரிக்கைகள் மூலமாக "ஆவியானவர் . தெளிவாகப் பேசுகிறார்". (1 தீமோ. 4 : 1 -4).

தேவன் நமக்குத் தந்துள்ள கட்டளைகளை புரிந்து கொள்ளுவதற்கு எந்த உள்ளுணர்வையும் மனநிலையையும் ஊகித்துக் கொண்டிருக்க வேண்டிய நிச்சய மற்ற நிலையில் தேவன் நம்மை விட்டு விடவில்லை.

நம்மிடம் தெளிவாகவும் இறுதியாகவும் சுவிசேஷத்தின் வார்த்தைகள் மூலமாகப் பேச, தேவன் தமது ஆவியிடம் ஒப்படைத்தார்.

அந்த ஆவியானவர்
வசனங்கள் மூலமாக இன்று
தெளிவாகப் பேசுகிறார்.

**ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்.**

வெளி 22 :17

# தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறத்தல்

தேவனுடைய பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்பது, உலகெங்குமுள்ள சகல மக்களின் பொதுவான விருப்பங்களில் ஒன்றாகும். நமது பரலோகத் தந்தையின் விருப்பமும் இதுவே. "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்," என இயேசு கற்பித்தார். (யோ. 3 : 16). "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" என இயேசு கிறிஸ்து மீண்டும் கற்பித்தார். அதை இன்னும் தெளிவாக விளக்க, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என கர்த்தர் கூறினார். (யோ. 3 : 3, 5).

இவ்வாறாக, தேவனுடைய நித்திய பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமாயின், ஒருவன் மறுபடியும் புதிதாகப் பிறக்க வேண்டும்; அந்த புதிய பிறப்பானது "தண்ணீரினாலும் ஆவியினாலும்" உண்டாயிருக்க வேண்டும் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்கப்பட்டுள்ளது. தண்ணீரினாலும் ஆவியினாலும் ஒருவன் எவ்வாறு பிறக்கிறான்? இது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கப் பட்ட கட்டளையாகவும் இது இருக்கிறது. "வாயால் சொல்லுவதை விட உணர்ச்சியால் அறிவதே மேல்" என்று கூறும் அற்புத அனுபவத்தை ஒருவன் அடையக்கூடிய நிகழ்ச்சி அல்ல இது. "மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன்" என மக்கள் பேசுவதை நாம் எல்லாரும் கேட்டிருக்கிறோம். அவர்கள் அவ்வாறு யாரைக் குறிப்பிடுகின்றனர்? திடீரென தனக்கு ஏற்பட்ட ஒரு அற்புத அனுபவத்தின் வழியாக தான் இரட்சிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டதாகக் கூறும் ஒரு மனிதனைப் பற்றி அவர்கள் அவ்வாறு பேசுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட ஒரு செயலைப்பற்றி வேதாகமத்தில் எங்குமே காணமுடிவதில்லை. நிச்சயமாக, ஒரு மனிதன் கிறிஸ்தவனாக மாற, மீண்டும் பிறக்க வேண்டும். ஒருவன் கிறிஸ்தவனாக இருந்தால், அவன் மீண்டுமாக பிறந்திருக்கிறான். ஏனெனில், ஒருவன் கிறிஸ்தவனாக வேறு எந்த வழியும் இல்லை. அவன் மீண்டும் பிறப்பதற்கு எந்தவிதமான அற்புத அனுபவமும் வாக்களிக்கப்படவில்லை. அல்லது, இப்படிப்பட்ட அனுப

வத்தைப் பெற்று ஒருவன் கிறிஸ்தவன் ஆனான் என்பதற்கு வேதாகமம் முழுவதையும் தேடினாலும் ஒரே ஒரு உதாரணம் காண முடியாது.

இயேசு கிறிஸ்துவின், இரட்சிப்பின் நற்செய்தியாகிய தேவனுடைய வசனத்தை ஒருவன் கேட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து, பாவங்களுக்கு மனந்திரும்பி, பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்று, பின்னர் அவ்வேளையில் தானே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்படுவோரின் சரீரமாகிய கர்த்தருடைய சபையில் ஒரு அங்கமாக, அதாவது கிறிஸ்தவனாக மாறும் போது அவன் மீண்டும் பிறக்கிறான் என்பதை வேதாகமம் மிகவும் தெளிவாகக் கற்பிக்கிறது. ஒத்துப் போகும் கீழ்க்கண்ட வசனங்களைக் கவனியுங்கள்: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்". அடுத்து, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்". (யோவான் 3 : 5; மாற்கு 16 : 16). இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே பரலோகத்தில், அதாவது தேவனுடைய ராஜ்யத்தில், பிரவேசிக்க முடியும்.

தேவனுடைய வசனமானது ஆவியால் அல்லது பரிசுத்த ஆவியால் மனிதனுக்கு அருளப்பட்டிருக்கிறது. அதற்கு மனிதன் கீழ்ப்படியும் போது, இரட்சிப்படைகிறான். மீண்டும் கவனியுங்கள் : "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒரிவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே". (1 பேதுரு 1 : 22, 23). மற்றுமோர் இடத்தில், அதே அப்போஸ்தலன் கூறும்போது, "வேதத்திலுள்ள எந்த தீர்க்க தரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (2 பேதுரு 1 : 20, 21).

எனவே, ஒரு மனிதன் தேவனுடைய வசனம் போதிக்கப்படுகையில் அதற்கு செவி சாய்த்து, கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிக்கப்பட வேண்டி நற்செய்தியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது,

அதாவது, பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் முழுகி திருமுழுக்குப் பெறும் போது, தண்ணீரினாலும் ஆவியினாலும் புதிய பிறவி எடுக்கிறான்; இப்போது மீண்டும் பிறந்தவனாக தேவனுடைய ராஜ்யத்திற்குள் அவன் பிரவேசிக்கிறான். அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்தில் 3000 மக்களைப் பற்றி படிக்கிறோமே, அவர்களும் புதிதாகப் பிறக்க, தண்ணீரினாலும் ஆவியினாலும் மீண்டும் பிறக்க, மேற்கூறிய அதே காரியத்தைத்தான் செய்திருந்தார்கள். கிறிஸ்துவின் நற்செய்தி அவர்களுக்குப் போதிக்கப்பட்டபோது, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என போதித்தவரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்பினார்கள். உடனே அவர்களுக்குச் சொல்லப்பட்டது: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." அவர்கள் என்ன செய்தார்கள்? "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்." அவர்கள் "தேவனைத் துதித்து, ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." (அப். 2 : 37, 38, 41, 47வசனங்களைப் படித்துப் பார்க்க). அவர்கள் தண்ணீரினாலும் ஆவியினாலும் மீண்டும் பிறந்தனரா? நிச்சயமாக, அவர்கள் மீண்டும் பிறந்தனர். அவ்வாறு பிறவாதிருந்தால் கர்த்தர் தமது சபையிலே அவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கமாட்டார். இருந்தபோதிலும், "சொல்லுவதைவிட உணர்ந்து தெரிந்து கொள்வது மேல்" என்ற ஒரு "அற்புத அனுபவத்தின்" விளைவாக அவ்வாறு நடக்கவில்லை. ஆனால் அவர்களுக்குப் போதிக்கப்பட்ட தேவனுடைய வசனத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்திருந்தனர்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தண்ணீரினாலும் ஆவியினாலும் மீண்டும் பிறந்த ஒரு மனிதனே. வேறு எந்த வழியிலும் ஒருவன் கிறிஸ்தவனாக முடியாது என்பதே உண்மை.

சன்னி டேவிட்
டெல்லி

# "அந்தி கிறிஸ்து" என்றால் யார்?

வேதாகமத்தில், 1 யோவான் 2 : 18, 22; 4 : 3; 2 யோவான் 7 ஆகிய வசனங்களில்"அந்தி கிறிஸ்து" என்ற சொல் காணப்படுகிறது. இரண்டு கிரேக்க வார்த்தைகள் (anti christos) இணைந்த இப்பதத்திற்கு "கிறிஸ்துவின் விரோதி" எனப் பொருள்.

தேவனுடைய வசனம் விளக்குவது போல, "கிறிஸ்துவின் விரோதி" யார் அல்லது என்னவென்பதை நாம் காண்போம்:

## 1 யோவான் 2 : 18 - 19 :

"பிள்ளைகளே, இது கடைசி காலமாயிருக்கிறது; அந்திக் கிறிஸ்து வருகிறனென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக் கிறிஸ்துகள் இருக்கிறார்கள் . . . அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை . . ."

அப்போஸ்தலர்களுடைய காலத்திலும் கூட, "கிறிஸ்துவுக்கு விரோதமான" எண்ணங்களும் நிலைகளும் பலரிடம் காணப்பட்டன. அப்படிப்பட்டவர்கள், ஆரம்பத்தில் சகோதரர்களுடன் இணைந்து செயல்பட்டு, பின்னர் உண்மையற்றவர்களாக இருந்த காரணத்தால் வெளியேறியவர்களாக இருந்தனர்.

## 1 யோவான் 2 : 22 :

"இயேசுவை கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து."

இயேசுவை கிறிஸ்து அல்ல என மறுதலிக்கும் எவனும் கிறிஸ்துவுக்கு விரோதி" ஆவான். பிதாவாகிய தேவன் நசரேயன் ஆகிய இயேசுவை கர்த்தரும் கிறிஸ்துவுமாக்கினார் என்பதை மறுக்கும் எவனும் "கிறிஸ்துவின் விரோதி". (அப்.2:36). அவருக்குக் கீழ்ப்படியாமல் இயேசுவின் அதிகாரத்தை பல மக்கள் மறுக்கிறார்கள் என்றால், அவர்களுடைய ஆவி அல்லது மனோநிலையே காரணம். (மத். 28 : 18 - 20). அவருடைய உபதேசத்தைக் கைக் கொள்ளாதவர்கள், தங்களை"கிறிஸ்துவின் விரோதி" எனக் காட்டிக் கொள்ளுகிறார்கள். எனவே அவர்கள் "பிதாவையும் குமாரனையும்" மறுக்கின்றனர். (2 யோவான் 9).

## 1 யோவான் 4 : 3 :

"மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று

நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே . . ."

இயேசுவை கிறிஸ்து என அறிக்கை செய்து அல்லது ஏற்றுக் கொண்டு, அதை நிரூபிக்க விசுவாசத்தோடு கிறிஸ்துவின் வார்த்தையை உபதேசித்து, அதன் படி நடக்கிறவர்கள் ஒவ்வொரு வரும் தேவனிடமிருந்து வந்த வர்கள். "அவர்கள் தேவனிட மிருந்து வந்தவர்களா" என்பதை சோதிக்க, பரிசுத்த ஆவியானவ ருடைய வசனமாகிய சுவிசே ஷத்தைக் கொண்டு நாம் நிரூ பிக்க முடியும். (அப். 17 : 11).

இயேசுவை கிறிஸ்து என ஏற்றுக் கொள்ளாத அல்லது அறிக்கை செய்யாத பல கள்ளத் தீர்க்க தரிசிகள் உள்ளனர். அப்ப டிப்பட்ட ஆவிகள் "கிறிஸ்துவின் விரோதிகள்" எனவே அவைகள் தேவனிடமிருந்து வராதவை.

## 2 யோவான் 7 :

"மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண் ணாத அநேக வஞ்சகர் உலகத் திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக் கிறான்." "மெசயா" (கிறிஸ்து) வருவதைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றுபவர் நசரேயனாகிய இயேசு என்பதை மறுப்பவர்கள் "கிறிஸ்துவின் விரோதிகள்" ஆவர். இதைத் தொடர்ந்து, இயேசு தம்மைத் தாமே "கிறிஸ்து" என ஒப்புக்கொண்டதை இப்ப டிப்பட்டவர்கள் விசுவாசிப்ப தில்லை. (மத்தேயு. 16 : 16 -7).

"ஏமாற்றுக்காரர்கள்" விசுவா சிகளைப் போல நடிக்கும் "பொய் யர்கள்" (1 யோவான்2 : 22). ஆனால் அவர்கள் அப்போஸ்த லர்கள் போதிக்காத "வேறொரு இயேசுவை போதித்து," "ஒரு வித்தியாசமான நற்செய்தியை" பலரும் ஏற்றுக் கொள்ளும்படி ஏமாற்றுகிறார்கள். (2 கொரி. 11 : 4). "அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவி னுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்ட வர்களாயிருக்கிறார்கள்." (2 கொரி. 11 : 13).

பரிசுத்த வேதாகமம் எந்த ஒரு தனிப்பட்ட மனிதனையும் "கிறிஸ்துவின் விரோதி" என சுட்டிக் காட்டி முன்னுரைக்க வில்லை. நாம் பார்த்த எல்லா வேதாகமக் குறிப்புகளின் படி, "கிறிஸ்துவுக்கு விரோதமான" ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயலைச் செய்பவனே அந்திக் கிறிஸ்து.

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்

## யெகோவா சாட்சிகள் - (7)

# பரிசுத்த ஆவியின் நபர்த் தத்துவத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்

பிதாவாகிய தேவனோடும் குமாரனாகிய கிறிஸ்துவோடும் பரிசுத்த ஆவியும் ஒரு தெய்வீக நபர் என்பதை வேதம் போதிக்கிறது. இருப்பினும், பரிசுத்த ஆவியானவரைக் குறித்து வேதம் போதிக்கிற இச்சாட்சியத்தை யெகோவா சாட்சியினர் ஏற்றுக்கொள்ள மறுக்கின் றனர். காரணம், இந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்டால் வேதத்தில் உள்ள பிற உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகும் என்ற பயமோ?

தங்களுடைய 'துணைப் புத்தகத்தில்' அவர்கள் கூறுவதாவது, 'தேவன் தமது கிரியைகளை நடப்பிக்கவும், தமது சித்தத்தை நிறைவேற் றவும் பரிசுத்த ஆவியானவர் ஒரு கருவியாக பயன்படுத்தப் படுகிறாரேயல்லாமல், பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரல்ல என்பதற்கு ஆதாரமாக வசனங்களும் ஒத்திருக்கின்றன'. தயவுசெய்து பின்வரும் வசனங்களை ஜெபத்துடன் வாசித்து வேதாகமம் இவர்களின் கூற்றை பொய்யாக்குவதை கவனியுங்கள்.

## பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரா?

தங்கள் கருத்தை நியாயப்படுத்த யெகோவா சாட்சியினர் நீதி 1 : 20 - 33 மத். 11 : 19; லூக். 7 : 35 ஆகிய வசனங்களைக் காட்டுகின்றனர். அதில் பண்புகளைக் குறிக்கும்'ஞானம்' போன்ற வார்த்தைகள் ஒரு நபரைக் குறிக்காது, என்று வாதிடுகின்றனர். இது ஒரு வகையில் உண்மையாயினும், எப்பொழுதும் உண்மையாயிராது. மேலும் அவர்கள் குறிப்பிடுகையில், "இயேசு பரிசுத்த ஆவியைக் குறித்து யோவானில் சொல்லியிருக்கிற 'அவர்' போன்ற நபர் தத்துவ வார்த் தைகளையும் பண்பைக் குறிப்பதாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்' என்கின்றனர். இப்படிப்பட்ட இவர்களின் தவறான கூற்று, 'ஒரு நாற்கா லிக்கு நான்கு கால்கள், எனவே நான்கு கால்கள் உள்ள யாவும் நாற்கா லிகளே' என்பது போல் உள்ளது. பண்பைக் குறிக்கும் வார்த்தைகள் 'நபராக' முடியாது என்றாலும், பரிசுத்த ஆவியானவர் ஒரு பண்பைக் குறிப்பதாக இராமல், நபராக இருக்கிறார் என்பதற்கு அநேகச் சான்றுகளை வேதாகமம் காட்டுகின்றது.

வேதாகமம் பரிசுத்த ஆவியின் குணநலன்களைக் குறித்தும் பேசுகிறது. அறிவுக்கூர்மை, உணர்வுகள், சித்தம் போன்ற வார்த்தைகள் ஒரு நபருக்கும் பொருந்துமானால், சுலபமாக இவ்வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவரும் ஒரு நபர் என்பதற்கு பொருந்தும். ஏனெனில்,

1. அவருக்கு அறிவுக்கூர்மை உணர்வுகள், சித்தம் போன்ற பண்புகள் இருப்பதை வேதம் தெளிவாகக் காட்டுகிறது.

   அ. அறிவுக்கூர்மை : பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆழங்களை ஆராயும் பண்பும், (1 கொரி. 2 : 10, 11, எபே. 1 : 17), போதிக்கிற அறிவும் பெற்றிருக்கிறார். (1 கொரி. 2 : 13).

   ஆ. உணர்வுகள் விசுவாசிகளின் பாவச் செயல்கள் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படச் செய்யும் (எபேசி. 4 : 30), ரோமர் 15 : 30-ல், ஆவியின் அன்பின் அடிப்படையில் தனது உபதேசத்தை அமைத்திருப்பதைக் காண்கிறோம்.

   இ. சித்தம் ஆவியானவர் தமது சித்தத்தின்படியே ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளிக்கிறார். (1 கொரி 12 : 11). பவுல் ஆசியாவிலும், பித்தினியாவிலும் பிரசங்கிப்பதைத் தடுத்து, ஐரோப்பா பகுதிக்குச் செல்ல (தமது சித்தத்தின்படி) கட்டளையிடுகிறார். (ரோமர். 16 : 6 -11).

2. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபருக்குரிய கிரியைகளை நடப்பிக்கிறார்.

   அ. 'என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்; (யோவான் 14 : 26).

குறிப்பு : அஃறிணை சக்தியாக பரிசுத்த ஆவியானவர் இருந்தால், அவரை ஒரு நபராக இங்கு சித்தரிக்கப்படுவது ஏன்?

   ஆ. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து மேலும் நாம் வேதாகமத்தில் வாசிப்பதாவது :

   1. ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார். (ரோமர் 8 : 24)

   2. பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார். (ரோமர். 8 : 14)

   3. பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துகிறார். (யோவான் 16 : 7 -12) ,

4. போராடுகிறார். (ஆதி. 6 : 3)

5. கட்டளையிட்டு வழி நடத்துகிறார். (அப். 8 : 29)

6. அற்புதங்களை நடப்பிக்கிறார். (அப். 8 : 34)

7. விசேஷித்த ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கிறார். (அப். 13:2)

8. ஒரு நபருக்குரிய வகையில் மரியாதைகளைப் பெற்றுக் கொள்கிறார்.

பரிசுத்த ஆவிக்கு முன்பாக பல செயல்கள் நடப்பிக்கப்படுகின்றன. எனவே அவர் ஒரு நபராக இல்லாத பட்சத்தில் மேற்படிச் செயல் முரண்பாடாக அமைந்துவிடும். ஆவியானவர் பேசியபோது, பேதுரு உடனடியாக கீழ்படிந்து சென்றார் (அப். 10 : 19 -21). பேதுரு அனனியா விடம், 'பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொன்னாய்' என்று சொன்னார். (அப். 5 : 3) அப்போஸ்தலனாகிய பவுல், "பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்' என்று எபேசியர் நிருபத்தில் எழுது கிறார் (எபேசி. 4 : 30) பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம் இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படமாட்டாது' என்று ஆண்டவர் சொன்னார். (மத். 12 : 31) ரோமர். 8 : 26-ல் பரிசுத்த ஆவியானவர் நமக்காக வாக்குக் கடங்காத பெருமூச்சுக்களோடு வேண்டுதல் செய்கிறார், என்று சொல்லப்பட்டுள்ளது.

(குறிப்பு : யோவான் 16 : 23, 24-ல் நாம் பிதாவினிடத்தில் குமார னாகிய கிறிஸ்து மூலமாய் ஜெபிக்க வேண்டும் என வாசிக்கிறோம். அப்படி ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்காக பரிந்து பேசுகிறார்.)

எனவே மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து, நபர் தத்துவம் இல்லாத ஒன்று இவைகளை நடப்பிக்கமாட்டாது என்றும், நபராக உள்ள ஒருவரே இவைகளை நடப்பிக்கிறார் என்றும் அறிய வேண்டும்.

அன்பு வாசகரே, யாருடைய விளக்கத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்? தேவனுடைய பரிசுத்த வசனங்களையா அல்லது பரிசுத்த ஆவிக்கு விரோதமான (யெகோவா சாட்சியினரின்) காவல் கோபுர போதனைகளையா?

E.A. Arumugam

(தொடரும்)

# கிறிஸ்தவ ஐக்கியம் என்றால் என்ன?

தேவன் கிறிஸ்தவ ஐக்கியத்தின் நிறுவனர் ஆவார். "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" - ( 1 கொரி. 1 : 9).

இந்த ஐக்கியத்தின் அஸ்திபாரம் இயேசு கிறிஸ்து. ஏனெனில், ". . . என் சபையைக் கட்டுவேன்" என அவர் வாக்களித்தார். (மத். 16 : 18). அப்போஸ்தலர் பவுல் எழுதினார் : "போடப்பட்டிருக்கிற அஸ்திபார மாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது". (1 கொரி. 3 : 11).

கிறிஸ்தவர்கள் இந்த ஐக்கியத்தை உருவாக்குகின்றனர். ஏனெனில் அவர்கள் ". . . அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான் களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்பு கிறது; அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தல மாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்". - (எபே. 2 : 19 22).

இயேசுவின் அப்போஸ்தலர்களுடன் இந்த ஐக்கியத்தில் கிறிஸ்த வர்கள் பங்கு கொள்ளுகிறார்கள். "நீங்களும் எங்களோடே ஐக்கிய முள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது." (1 யோவான் 1 : 3).

". . . நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் . . ." என இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டப டியால் (மத். 28 : 19 -2 0) அவர்கள் இதைச் செய்தனர்.

இந்த புது ஐக்கியத்தின் நிறுவனரையும், அஸ்திபாரத்தையும் பெந்தெகொஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் பிரகடனப்படுத்தினார்கள். இந்த ஐக்கியத்திற்குள் வந்து சேரக்கூடிய நிபந்தனைகளை அவர்கள் தெரிவித்தனர். விசுவாசித்து, மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்று இத்திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் "... அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப். 2 : 14 - 42).

கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளிலே "கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியத்தில்" பங்கு கொள்ளவும், "கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாகிய" அப்பத்தில் பங்கு கொள்ளவும் கூடுகிறார்கள். (1 கொரி. 10 : 16).

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக ஆமென்." - (2 கொரிந்தியர் 13 : 14).

எஸ்.எஸ். ராஜன்.

TIL,

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

யோவா. 17 : 21, 22

# கிறிஸ்துவின் சபை என்பதும் இராஜ்ஜியம் என்பதும் ஒன்றுதான்

சபை என்பதும், இராஜ்ஜியம் என்பதும் ஒன்றே என்று நாம் நிரூபித்தால் நாம் வெற்றி பெற்றுவிட்டால், பின்பு கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் காரியங்கள் யாவும் கிறிஸ்துவின் சபையைக் குறிக்கிறது என்று திட்டவட்டமாக அறியலாம்.

மத்தேயு. 16:18, 19. ஆகிய வசனங்களில் இவ்வார்த்தைகளை இயேசு மாறி மாறி உபயோகித்திருக்கிறார். "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்றார் சபை, இராஜ்ஜியம் இரண்டுமே பரிசுத்த வான்களால் ஆக்கப்பட்டன இந்த இரண்டுமே பரிசுத்தவான்களால் ஆக்கப்பட்டவைகள் என்பதைப் பின்வரும் வசனங்கள் நிரூபிக்கின்றன. கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கு ." என்று பவுல் எழுதுகிறார் (1 கொரி. 1:2) ஆகவே சபை பரிசுத்தவான்களால் கட்டப்பட்டுள்ளது. "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர் களாகினவரும், இருளின் அந்தகரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" என்று கொலோசெயருக்கும் எழுதினார். (கொலே 1:12,13) பரிசுத்த வான்கள் இராஜ்ஜியத்துக்கு உட்படுத்தப்பட்டவர்கள். ஆக தேவனுடைய சபை இராஜ்ஜியம் இரண்டும் பரிசுத்தவான்களைக் கொண்டுள்ளதால் இரண்டும் ஒன்றுதான்.

## சபை, இராஜ்ஜியம் இரண்டும் இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்களைக் கொண்டுள்ளது.

அப். 20:28-ல் "தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்ட தமது சபை" யைக்குறித்து சொல்லப்பட்டுள்ளது. சபை என்பது இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களின் சங்கம் என்று நாம் அறிவோம். அப்போஸ்தலன் யோவான் கிறிஸ்துவைக் குறித்து "நீர் அடிக்கப்பட்டு... எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்களை தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்" என்கிறார் வெளி 5:9,10. மேற்சொன்ன இரண்டு வசனப்பகுதிகளிலும் சபை, இராஜ்ஜியம் இரண்டுமே இரத்தத்தால் வாங்கப்பட்டவர்களால் ஆக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். ஆகவே சபை என்பதும் இராஜ்ஜியம் என்பதும் ஒன்றே.

## தேவனுடைய வீட்டின் வேலைக்காரர்கள் இராஜ்ஜியத்தின் ஆசாரியார்கள்

சபை என்பது தேவனுடைய ஆவிக்குரிய வீடு (1 தீமோ 3:15) தேவனுடைய வீடு பரிசுத்தமாக்கப்பட்ட அந்த ஆசாரியர்களால் ஆக்கப் பட்டுள்ளது. 1 பேதுரு 2:5 அந்த ஆசாரியர்களே இராஜ்ஜியத்தின் அங்கத் தினராய் இருக்கிறார்கள். (வெளி 1:6; 5:9, 10) ஆகவே தேவனுடைய வீடாகிய சபை ஆசாரியர்களுடைய இராஜ்ஜியம் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, "இராஜ்ஜியம்" என்ற வார்த்தை கிறிஸ் துவின் இராஜ்ஜியத்தைக் குறிக்குமானால் அது கிறிஸ்துவின் சபையை குறிக்கிறது. ஆகவே இயேசுவின் இரத்தத்தினாலே வாங்கப்பட்ட சபையும் (அப். 20:20) இரத்தத்தினால் மீட்கப்பட்ட இராஜ்ஜியமும் (வெளி 5:9,10) ஒன்றே.

யோவான் ஸ்நானகனும், இயேசுவும் பரலோக இராஜ்ஜியம் சமீபமாயி ருக்கிறது"என்று போதித்தார்கள். (மத். 3:1, 2; மத் 4:17; மாற்கு 1:5) அதே செய்தியையே அறிவிக்கும்படி பன்னிருவருக்கும், எழுபது பேருக்கும் கட்டளை கொடுத்தார் (மத் 10:1, 7: லூக் 10:1, 9) இன்னும் இராஜ்ஜியம் வரவில்லை என்று சிலர் போதிப்பார்களானால் யோவான் ஸ்நானகன், இயேசு மற்றும் பன்னிருவர் அறிவித்ததற்கு விரோதமாய் சமீபித்திருக்க வில்லை" என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

மேலும் இயேசு இராஜ்ஜியம் வருவதை சிலர் காண்பார்கள் என்றும் சொன்னார். (மாற்கு 9:1) இராஜ்ஜியம் இன்னும் வரவில்லை என்று சொல்லுவோமானால் சிலர் கிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளாய் உயிருடன் இருக்கிறார்கள் என்று பொருளாகும். கிறிஸ்துவின் வார்த் தைகள் ஆர்த்தமற்றவைகளா? மாற்கு 9:1-ல்'தேவனுடைய இராஜ்ஜியம் பெலத்தோடே வருவதைக் காணுமுன் சிலர் மரணத்தை ருசிபார்ப்ப தில்லை என்று இயேசு சொன்னார். அப் 1:8-ல் "பரிசுத்த ஆவி உங்களி டத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைவீர்கள்" என்று அப்போஸ்தலர்களிடம் சொன்னார். இரண்டையும் இணைத்துப் பார்த்தால் இராஜ்ஜியம் பலத்தோடே வருமென்றும், அது பரிசுத்த ஆவி வரும்போது வரும் என்றும் ஆகிறது.

இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் இடமும், நேரமும், நாழிகையும் கூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. இயேசு பரமேறுவதற்கு முன்பாக "நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரில் தங்கியிருங்கள் என்றார். அப்படியே எருசலேமிலே (அப் 1:5) பெந்தே கொஸ்தே நாளில் அப் 2:1 (மூன்றாம் மணி வேளையில் அதாவது நம்முடைய நேரம் 9 மணியளவில்) (அப் 2:15) பரிசுத்த ஆவியா னவர் பலத்தோடே வந்தபொழுது இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது. அப் 2:1-4. அதுவே கிறிஸ்துவின் சபை உதயமான நேரம்

எட்வார்ட்டன்

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, **AUG** 1995
AUG 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER

BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701